

"என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி பயிற்சி கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளை செயல்படுத்திட மண்டல பொறுப்பாளர் அ.இராசா தலைமையில் நடைபெற்ற காணொளி கூட்டம் காஞ்சிபுரம் மாவட்ட தி.மு.க சார்பில் ஆலந்தூரில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் முன்னிலையில் நடைபெற்றது.

### சீனாவில் நடைபெற்ற பேட்மிட்டன்–2025 போட்டியில் இந்தியாவின் முதல் தங்கப் பதக்கத்தை வென்று சாதனை படைத்துள்ள

# தமிழ்நாட்டின் வீராங்கனை செல்வி தீக்ஷாவுக்கு ரூ.5 லட்சம் ஊக்கத் தொகை!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் காசோலையினை வழங்கினார்!

சென்னை, நவ.1-

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சீனாவில் நடைபெற்ற பேட்மிண்டன் ஆசிய ஜூனியர் சாம்பியன்ஷிப் 2025 போட்டியில், இந்தியாவின் முதல் தங்கப் பதக்கத்தை வென்று வரலாற்று சாதனை படைத்துள்ள தமிழ்நாட்டின் வீராங்கனை செல்வி. எஸ்.ஆர். தீக்ஷா அவர்களுக்கு 5,00,000 ரூபாய்க்கான ஊக்கத் தொகை காசோலையை வழங்கினார்.

முதலமைச்சர் அவர்கள் விளையாட்டுத் துறையில் தமிழ்நாட்டை இந்தியாவின் முதன்மை மாநிலமாக உருவாக்கும் வகையில் பல்வேறு முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகின்றார். விளையாட்டு வீரர்களுக்கு 3 சதவீத இட ஒதுக்கீடு அளித்து பல்வேறு அரசுத்துறைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் பணி நியமனம் செய்து வருகின்றார்.

தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கான சிறப்பு உதவித்தொகை (Elite) திட்டத்தின்கீழ் விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்பட்டு வந்த ஊக்கத் தொகை 25 இலட்சம் ரூபாயை 30 இலட்சம் ரூபாயாக உயர்த்தியதோடு இத்திட்டத்தில் பயன் பெறும் பயனாளிகளின் எண்ணிக்கையை 12லிருந்து 50ஆக உயர்த்தியுள்ளார்.

**விளையாட்டு வீரர்களின் எண்ணிக்கை உயர்வு!**

மேலும் சர்வதேச அளவிலான போட்டிகளில் பதக்கங்கள் பெறுவதற்கான ஊக்குவிப்பு (MIMS) திட்டத்தின் கீழ் உள்ள விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்பட்டு வந்த நிதியுதவியை 10 இலட்சம் ரூபாயிலிருந்து இருந்து 12 இலட்சம் ரூபாயாக உயர்த்தியதோடு, தற்போது பயன் பெறும் விளையாட்டு வீரர்களின் எண்ணிக்கையை 125 ஆக உயர்த்தியுள்ளார்.

அதேபோல், சாம்பியன் டெவலப்மெண்ட் திட்டத்தின் (CDS) கீழ் பயன் பெறும் 20 வயதிற்குட்பட்டோர் பிரிவு விளையாட்டு வீரர்களின் எண்ணிக்கையை 100 லிருந்து 200 ஆக உயர்த்தியுள்ளார். மேலும் இவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த நிதி உதவியை 2 இலட்சத்திலிருந்து 4 இலட்சமாக உயர்த்தி வழங்கி வருகின்றார்.

தமிழ்நாடு முதலமைச்சர் விளையாட்டு வீரர்கள் சர்வதேச போட்டிகளில் கலந்து கொள்ளவும், வெளிநாடுகளுக்கு சென்று பயிற்சி பெறவும், அதிநவீன உயர்தர விளையாட்டு உபகரணங்களை வாங்கவும், தமிழ்நாடு சாம்பியன் அறக்கட்டளையை உருவாக்கி நிதியுதவி அளித்து வருகின்றார். மேலும், சர்வதேச மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் வெற்றி பெற்ற விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத்தொகையை வழங்கி வருகின்றார்.

**உலகத் தரத்திலான விளையாட்டு மைதானம்!**

மேலும், தமிழ்நாடு முழுவதும் புதிய மாவட்ட விளையாட்டு அரங்கங்கள், உலக தரத்திலான உள் அரங்க விளையாட்டு மைதானங்கள், முதலமைச்சர் சிறிய விளையாட்டு அரங்கங்கள், ஒலிம்பிக் தரத்திலான ஹாக்கி மைதானங்கள், விளையாட்டு வீரர்கள் உலகத் தரத்திலான பயிற்சி பெறுவதற்காக நுங்கம்பாக்கம் டென்னிஸ் மைதானம், நேரு விளையாட்டு அரங்கத்தில் உள்ள கூடை பந்து, வாலிபால் பந்து மைதானங்களில் தானியங்கி முறையில் பந்து எறியும் அதிநவீன இயந்திரங்கள் என விளையாட்டு கட்டமைப்புகளை மேம்படுத்தி வருகின்றார்.

செஸ் ஒலிம்பியாட், ஆசிய ஆண்கள் ஹாக்கி சாம்பியன்ஷிப் கோப்பை, கேலோ இந்தியா விளையாட்டு போட்டி, ஆசிய அலைச்சறுக்குப் போட்டி, சென்னை ஓபன் சர்வதேச மகளிர் டென்னிஸ் சாம்பியன்ஷிப் 2025 போட்டி, இரவு நேர தெரு கார் பந்தயம், மாற்றுத் திறனாளிகளுக்கான தேசிய அளவிலான போட்டிகள், இலட்சகணக்கான விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் கலந்து கொண்ட முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகள் என தொடர்ந்து சர்வதேச, தேசிய, மாநில அளவிலான போட்டிகளை நடத்தி வருகின்றார்.

**பதக்கங்கள் குவித்து வரும் தமிழ்நாட்டு வீரர்கள்!**

இவ்வாறு, தமிழ்நாட்டில் விளையாட்டு உட்கட்டமைப்புகளை மேம்படுத்துதல், சர்வதேச அளவிலான போட்டிகளை நடத்துவது, விளையாட்டு வீரர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் செய்து தருவதால் தமிழ்நாட்டு விளையாட்டு வீரர்கள், மாற்றுத் திறனாளி விளையாட்டு வீரர்கள் தேசிய, சர்வதேச விளையாட்டு போட்டிகளில் தொடர்ந்து பதக்கங்களை குவித்து முதலமைச்சர் அவர்களின் கனவை நிறைவேற்றி வருகின்றனர்.

கடந்த ஒருவார காலமாக, செஸ் போட்டியில் கிராண்ட் மாஸ்டர், பஹ்ரைனில் நடைபெற்ற மூன்றாவது ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டியில், கபடி, தடகளப் போட்டிகள், பளுதூக்கும் போட்டி, நான்காவது தெற்காசிய சீனியர் தடகளப் போட்டிகள், ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற பாரா பேட்மிண்டன் போட்டி என தொடர்ந்து, தினந்தோறும் தமிழ்நாட்டு வீரர், வீராங்கனைகள் பதக்கங்களை குவித்து வருகின்றனர்.

அதனடிப்படையில், 2025 அக்டோபர் 21 முதல் 26 வரை சீனாவில் நடைபெற்ற பேட்மிண்டன் ஆசிய ஜூனியர் சாம்பியன்ஷிப் 2025 போட்டியில், ஒற்றையர் பிரிவில் இந்தியாவிற்கான முதல் தங்கப் பதக்கத்தை வென்று வரலாற்று சாதனை படைத்துள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சாம்பியன்ஸ் மேம்பாட்டுத் திட்ட (CDS) திருவள்ளூர் மாவட்ட வீராங்கனை செல்வி.எஸ்.ஆர். தீக்ஷா அவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (31.10.2025) வாழ்த்து தெரிவித்து, 5,00,000 ரூபாய்க்கான ஊக்கத் தொகை காசோலையை வழங்கினார்.

இந்நிகழ்வில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, பயிற்சியாளர், பெற்றோர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### 2026 – சட்டமன்றத் தேர்தலுக்குப் பின்

# தமிழ்நாட்டில் பா.ஜ.க. காணாமல் போய்விடும்!

## அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!

புதுக்கோட்டை. நவ. 1-

புதுக்கோட்டை புதிய பேருந்து நிலையம் அருகே உள்ள கலைஞர் பூங்கா முன்பு அமைக்கப்பட்டுள்ள மகளிர் சுய உதவி குழுவினரால் தயாரிக்கப்படும் கைவினைப் பொருட்களை விற்பனை செய்வதற்காக அமைக்கப்பட்டுள்ள மதி அங்காடியை தமிழ்நாடு இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ் ரகுபதி, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே. செல்லப்பாண்டியன் ஆகியோர் திறந்து வைத்தனர். மேலும் இதில் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா, மாநகராட்சி மேயர் திலகவதி செந்தில் உள்ளிட்டரும் கலந்து கொண்டனர்.

அப்போது செய்தியாளர்களை சந்தித்த தமிழ்நாடு இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி கூறுகையில்:

எஸ்.ஐ.ஆர். குறித்து ஏற்கனவே தி.மு.க. அதன் தோழமைக் கட்சிகளின் கூட்டத்தை கூட்டி அதில் தமிழ்நாடு முதலமைச்சர் தமிழ்நாட்டில் அனைத்து கட்சி கூட்டத்தை கூட்ட நவம்பர் இரண்டாம் தேதி முடிவு செய்துள்ளார். அதில் அனைத்து கட்சிகளின் கருத்துகளும் பதிவு செய்யப்படும். அதன் பிறகு தொடர் நடவடிக்கை எடுக்கப்படும்.

சிறுபான்மையினர் மக்களை ஒட்டுமொத்தமாக வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்குவதற்கும், பட்டியல் சமூகத்தைச் சேர்ந்தவர்களை நீக்குவதற்கும் தேர்தல் ஆணையத்தின் மூலமாக ஒன்றிய அரசு மேற்கொண்டு இருக்கிறது. இதை எந்த காலத்திலும் திமுக கேட்கவில்லை. ஏற்கவில்லை. பீகாரிலும் இது போன்றுதான் நடந்துள்ளது. இந்தியாவில் தொடர்ந்து அகதிகளாக வந்து இங்கேயே இருக்கக்கூடிய நம்முடைய இலங்கை தமிழர்கள் போன்றவர்கள் பிற நாடுகளில் இருந்து வந்தவர்கள் எல்லாம் குடியுரிமை பெற முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இலங்கை தமிழர்களுக்கு நாம் இங்கு வீட்டு வசதி ரேஷன் பொருட்கள் அனைத்தும் கொடுத்து வருகிறோம். ஆனால் அவர்களுக்கு இங்கு குடியுரிமை கிடையாது. 11 ஆண்டுகள் 12 ஆண்டுகள் இருந்து அவருடைய மூதாதையர்கள் இந்தியாவில் இருந்த ஆதாரத்தை நிருபித்தால் கூட அவர்களை வாக்காளர் பட்டியலில் சேர்ப்பது கிடையாது.

ஒரு வாக்காளரை இந்திய குடிமகனா? இல்லையா என்பதை தீர்மானிக்க வேண்டியது இந்தியன் சிட்டிசன் ஆக்ட் 1955. ஆனால் இந்திய குடிமகனா இல்லையா என்பதை முடிவு செய்யும் அதிகாரம் தேர்தல் ஆணையத்திற்கு வழங்கப்பட்டிருக்கிறது. இது ஒட்டுமொத்தமாக நமது அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு எதிரானது.

ஆதாரை ஏற்றுக்கொள்வது என்பது வேறு. அதே நேரத்தில் ஒருவரை இந்திய குடிமகனா இல்லையா என்று தீர்மானிக்கக்கூடிய சக்தியை இவர்களுக்கு யார் கொடுப்பது. ஆதார் வைத்திருப்பவர்கள் இந்திய குடிமகன் தானே, அப்புறம் ஏன் தேர்தல் ஆணையம் தான் இந்தியாவின் குடிமகனா இல்லையா என்பதை தீர்மானிக்கும் என்று சொல்வது ஏன்? இது நிச்சயம் தவறு செய்யக்கூடிய முன்னோட்டமாக அமைந்திருக்கிறது.



இதுகுறித்து நீதிமன்றத்தில் இருக்கக்கூடிய வழக்குகளில் நாங்களும் சேர்ந்துள்ளோம் நூற்றுக்கும் மேற்பட்ட இயக்கங்கள் தங்களை இணைத்துக் கொண்டுள்ளனர்.

தமிழ்நாடு அரசு ஊழியர்கள் நேர்மையானவர்கள் அவர்களுக்கு சில கட்டளைகள் வரும்பொழுது அந்த கட்டளைகளை பின்பற்றக் கூடிய சூழ்நிலை வரு கிறது. எப்படிப்பட்ட ஆணைகளை தேர்தல் ஆணையம் சொல்லும் என்பது தெரியாது. தேர்தல் ஆணையம் மற்றும் தவறான விஷயங்களை சொல்லிவிட்டால் அதிலிருந்து பாதிக்கப்படுபவர்களுக்கு காப்பாற்ற வேண்டும்.

தமிழ்நாட்டில் வெளி மாநிலங்களில் இருந்து வந்து வேலை பார்க்கக்கூடிய எண்ணிக்கை லட்சத்திலிருந்து கோடி கணக்கில் வந்துள்ளது. பல்வேறு மாநிலங்களில் இருந்து புலம்பெயர்ந்து இங்கு வேலை பார்த்துவிட்டு அவர்களது பண்டிகை காலங்களில் போது அவர்களது சொந்த மாநிலங்களுக்கு சென்று விடுகின்றனர்.

ஆனால் இதில் இருக்கக்கூடிய ஆபத்து அவர்களுக்கு இங்கு வாக்காளர்களாக கொடுக்கும் பொழுது தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அரசியல் சூழ்நிலை தெரியாது. அவர்களது மாநிலத்தின் அரசியல் சூழ்நிலையை வைத்துக் கொண்டு வாக்களிப்பார்கள். அதனால் தமிழ்நாட்டை பற்றி தெரியாதவர்களை ஒரே இடத்தில் நிரந்தரமாக இல்லாதவர்களை எல்லாம் தமிழ்நாட்டின் வாக்காளர் பட்டியலில் சேர்க்கக்கூடாது என்பதுதான் எங்களது கருத்து.

தமிழ்நாட்டில் இருந்து புலம்பெயர்ந்து வெளி மாநிலங்களுக்கு செல்பவர்கள் அங்கேயே நிரந்தரமாக தங்கி விடுகின்ற னர். ஆனால் பீகாரில் இருந்து வருபவர்கள் கோயம்புத்தூரில் இரண்டு மாதமும் திருப்பூரில் இரண்டு மாதமும் திருச்சி திருநெல்வேலியில் மூன்று மாதமும் வேலை பார்க்கிறார்கள் இப்படி அடிக்கடி இடத்தை மாற்றிக்கொண்டு தற்காலிகமாகத்தான் பணி புரிகின்றனர். ஆனால் தமிழ்நாட்டில் இருந்து வெளி மாநிலங்களுக்கு செல்பவர்கள் நிரந்தரமாக அங்கே இருக்கின்றனர். அதனால் நிரந்தரவாசி களாக எடுத்துக் கொள்ள முடியும். ஆனால் வெளிமாநிலத்தில் இருந்து தமிழ்நாட்டிற்கு வருபவர்கள் அப்படி இருப்பதில்லை அவர்களை நிரந்தரவாசி களாக எடுத்துக் கொள்ள முடியாது நிரந்தர வாசிகளாக இருப்பவர்கள் தான் வாக்களிக்க முடியும்.

2026 தேர்தலுக்குப் பிறகு பாஜக தமிழ்நாட்டில் இருந்து காணாமல் போகுமே தவிர எங்களது தலைவரோ திமுகவோ காணாமல் போவாது. மீண்டும் திமுகவின் 2.0 தொடரும்.

விவசாயிகள் இழப்பீடு ஏற்படும் பொழுது அவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படுகிறது. பொதுமக்கள் யாரும் பாதிக்கப்பட்டதாக சொல்லவில்லை.

நயினார் நாகேந்திரன் அவருக்கு கொடுத்த தலைவர் என்ற பதவியை தக்க வைப்பதற்காக எதை வேண்டுமென்றாலும் பேசி வருகிறார், புதிய கூட்டணிகள் அவர்களிடத்தில் செல்லப் போவதில்லை.

கேரளா பிஎம்சி திட்டத்தில் சேர்த்ததைப் பற்றி எங்களுக்கு கவலை இல்லை. எங்களது கொள்கையைத் தான் நாங்கள் சொல்ல முடியும்.

இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.



அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் நேற்று (31.10.2025) ஆணையர் அலுவலகத்தில் வள்ளலார் சர்வதேச மாநாடு முன்னேற்பாடு பணிகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் முனைவர் துரை. இரவிச்சந்திரன், தலைமைப் பொறியாளர் பொ.பெரியசாமி, கூடுதல் ஆணையர் சி.ஹரிப்ரியா, மா.கவிதா, கோ.செ.மங்கையர்க்கரசி, சி. கல்யாணி, சுகிசிவம், தேச மங்கையர்க்கரசி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் கழக அரசு பொறுப்பேற்ற பின்

# 3,740 கோயில்களுக்கு குடமுழுக்கு!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

சென்னை, நவ.1-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்றபின், 3,740 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது என்று இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு நேற்று (31.10.2025) சென்னை, ஓட்டேரி, செல்லப்பிள்ளைராயர் பெருமாள் திருக்கோயில் குடமுழுக்கு பெருவிழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

பின்னர், கோயம்பேடு, குறுங்காலீஸ்வரர் மற்றும் வைகுண்டவாசப் பெருமாள் திருக்கோயிலில் ரூ.53.90 இலட்சம் செலவில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள மரத்தேர் திருத்தேர் வெள்ளோட்டத்தினை வடம் பிடித்து தொடங்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து, பெசன்ட் நகர் மகாலட்சுமி திருக்கோயில் குடமுழுக்கு பெருவிழாவில் இறையன்பர்களுடன் பங்கேற்று சிறப்பித்தார்.

பின்னர், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு பொறுப்பேற்றபின், இந்து சமய அறநிலையத்துறையில் பல்வேறு திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதோடு, பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளும் மேம்படுத்தி வழங்கப்பட்டு வருகிறது.

ஓட்டேரி, அருள்மிகு செல்லப்பிள்ளைராயர் பெருமாள் திருக்கோயில், பெசன்ட் நகர் அருள்மிகு மகாலட்சுமி திருக்கோயில் உள்பட 14 திருக்கோயில்களுக்கு இன்றைய தினம் குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. ஒட்டுமொத்தமாக இன்றுவரை 3,740 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது.

100 ஆண்டுகள் பழமை வாய்ந்த ஓட்டேரி செல்லப்பராயர் பெருமாள் திருக்கோயிலுக்கு 12 ஆண்டுகளுக்குப் பின் ரூ. 1.02 கோடி செலவில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு இன்றைய தினம் குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது. அதேபோல பெசன்ட் நகர் மகாலட்சுமி திருக்கோயிலுக்கு 13 ஆண்டுகளுக்கு பின் ரூ.2.08 கோடி செலவில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது. இத்திருக்கோயிலில் 1976-ஆம் ஆண்டு முதல் பூட்டப்பட்டிருந்த திருக்கோயிலின் கிழக்குப் பக்க வாசல் 50 ஆண்டுகளுக்குப் பின் திறக்கப்பட்டு, பக்தர்கள் தரிசனத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த அரசு பொறுப்பேற்ற பின் ரூ.75.55 கோடி மதிப்பீட்டில் 134 புதிய மரத்தேர்களும், ரூ. 19.20 கோடி மதிப்பீட்டில் 75 மரத்தேர் மராமத்து பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மரத்தேர்களை பாதுகாத்திடும் வகையில் ரூ.30.31 கோடி மதிப்பீட்டில் 197 திருத்தேர் கொட்டகைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. மேலும் ரூ.31 கோடி மதிப்பீட்டில் 5 புதிய தங்கத் தேர்களும், ரூ.29.77 கோடி மதிப்பீட்டில் 9 வெள்ளித் தேர்களும் உருவாக்கப்பட்டு வருகின்றன.

இவற்றில் பெரியபாளையம் தங்கத் தேரும், திருத்தணி மற்றும் காளிகாம்பாள் திருக்கோ யில் வெள்ளித் தேர்களும் நிறைவு பெற்று பக்தர்கள் நேர்த்திக்கடன் செலுத்துவதற்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. அதேபோல பல ஆண்டு காலமாக ஓடாமல் இருந்த தங்கத்தேர், வெள்ளித்தேர் மற்றும் மரத்தேர்களை ஓட வைத்த பெருமை இந்த அரசுக்கு உண்டு.

அந்த வகையில் இன்றைய தினம் கோயம்பேடு குறுங்காலீஸ்வரர் மற்றும் வைகுண்டவாச பெருமாள் திருக்கோயிலுக்கு ரூ.53.90 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள மரத்தேர் இன்றைய தினம் வெள்ளோட்டம் விடப்பட்டுள்ளது. இப்படி ஆன்மிகப் பெரியோர்கள் மற்றும் இறையன்பர்கள் மகிழ்ச்சியுறும் வகையில் திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொண்டு குட முழுக்குகள், பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை மேற்கொண்டு திராவிட மாடல் அரசு ஆன்மிக அரசாக திகழ்ந்து வருகிறது என்று தெரிவித்தார்.

### ஈரோடு வடக்கு மாவட்டம்

# நம்பியூர் கிழக்கு ஒன்றியம்

## நம்பியூர் பேரூர்க் கழகப் பொறுப்பாளர் நியமனம்

**தலைமைக் கழக அறிவிப்பு!**

ஈரோடு வடக்கு மாவட்டம், நம்பியூர் கிழக்கு ஒன்றியம், நம்பியூர் பேரூர்ச் செயலாளர் எஸ்.பி. ஆனந்தகுமார் அவர்களுக்குப் பதிலாக **திரு. என். எஸ்.ஆனந்தகுமார்** (11/4, பிள்ளையார் கோவில் வீதி, ஜிஎம்எஸ் பால் பண்ணை பின்புறம், நம்பியூர் - 638 458) அவர்கள் நம்பியூர் பேரூர்க் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட பேரூர்க் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 31.10.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

### தருமபுரி மேற்கு மாவட்டம்

# காரிமங்கலம் கிழக்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

**தலைமைக் கழக அறிவிப்பு!**

தருமபுரி மேற்கு மாவட்டம், காரிமங்கலம் கிழக்கு ஒன்றியச் செயலாளர் அடிலம் டி.அன்பழகன் அவர்களுக்குப் பதிலாக **திரு. ஜி.வி.கே.சரவணன்** (கெங்குசெட்டிப்பட்டி கிராமம், பைசுஅள்ளி அஞ்சல், காரிமங்கலம் வட்டம், தருமபுரி மாவட்டம்) அவர்கள் காரிமங்கலம் கிழக்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 31.10.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.



கடலூர் மேற்கு மாவட்ட இளைஞரணி செயற்குழு கூட்டத்தில் அமைச்சர் சி.வெ.கணேசன் சிறப்புரையாற்றினார். சபா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ., மாநில இளைஞரணி துணை அமைப்பாளர் தாட்கோ இளையராஜா. மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம்.எஸ்.கணேஷ்குமார், துணை அமைப்பாளர்கள், ராஜேஷ், துரைராஜ், சதாம், நாராயணசாமி, பாரதிராஜா, இலக்கிய அணி கலைச்செல்வன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள்,இளைஞரணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.